42

தமிழில் எழுத்துக் குறை

[சி. சுப்பிரமணிய பாரதி]

ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்ட்ரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மற்ற பாரத பாஷைகளி லெல்லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.

அதாவது, க-ச-ட-த-ப என்ற ஐந்து வல்லெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக,

	வடசொல்	பொருள்
1.	பரம்	மேலானது
2.	பலம் (ப = ph)	பயன்
3.	பலம் (ப = b)	வலிமை
4.	பாரம் (ப = bh)	சுமை

வெவ்வேறு எழுத்துக்களை முதலாகக் கொண்ட இந்த நான்கு சொற்களையும் தமிழில் வழங்கி வருகிறோம். ஆனால், "எல்ல செட்டி லெக்க ஏக லெக்க" என்பதுபோல எல்லாவற்றிற்கும் ஒரே "ப" தான் போடுகிறோம்.

ஞானபாநு: 1915 ஜூலை - பக். 102-105

ஆனால், ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி. நியாய மென்று வைத்துக் கொள்வோம்.

வெளி நாட்டு ஊர்களின் பெயர்களையும், மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்டுமா, அதுவும் வேண்டாமா?

'சுதேச மித்திரன்' பத்திரிகையைச் சென்ற 15 வருஷங்களாகப் படித்துவரும் ஒரு அய்யங்கார் நமது நிதானக் கட்சித் தலைவராகிய ஸ்ரீ கோகளே (Gokhale)யின் பெயரைத் தப்பாக உச்சரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். 'தங்கம்' என்ற சொல்லில் 'க' உச்சரிப்பதுபோல அப் பெயரின் முதலெழுத்தாகிய "கோ" (Go)வை மெலிதாகச் சொல்ல வேண்டும். பிராமணர் "கோபுரம்" என்று சொல்லும்போது "கோ"வை எப்படிச் சொல்லுகிறார்களோ அதுபோல "கோகளே"யின் முதலெழுத்தையும் சொல்லவேண்டும். இரண்டாவதெழுத்தாகிய "க" என்பதை 'க்ஹ' என்ற ஒலி இலேசாகத் தோன்றும்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும். "மகம்" என்று வைதிகப் பிராமணர் சொல்வதுபோலே, மேற்படி அய்யங்கார் இதை (Kokhale) என்று சொன்னார். அவர்மேல் குற்றமில்லை, 'சுதேச மித்திரன்' மேலும் குற்றமில்லை; தமிழில் எழுத்துக் குறைகிறது.

பெல்லாரி, குத்தி, பனாரஸ், பம்பாய் என்று நமது நாட்டு ஊர்ப் பெயர்களைக்கூட நாம் விபரீதமாக எழுதும்படி நேரிட்டிருக்கிறது! இதற்கென்ன விமோசனம்?

கல்கத்தாவிலிருக்கும்போது ஸ்ரீமான் அரவிந்த கோஷ் (இவர் பெயரையும் தமிழில் சரியாக எழுத இடமில்லை "*Ghosh*" என்பதை "*Kosh*" என்று எழுத நேரிடுகிறது!) - ஸ்ரீமான் அரவிந்தர் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பினாராம். அங்கு தென்னாட்டு மனிதர் ஒருவர் இவருக்கு நமது அரிச்சுவடி முழுதும் கற்றுக் கொடுத்தார்.

முதல் பாடப் புஸ்தகமும் நடந்தது. அப்படியிருக்கும்போது ஒருநாள் ஒரு தமிழ் நாட்டுப் பத்திரிகை யகப்பட்டது. அதில் "பீரேந்திர நாத தத்த குப்தர் வழக்கு" என்று மகுடமிட்டு ஒரு வ்யாஸம் எழுதி யிருந்தது. அதைப் பார்த்து விட்டு அரவிந்தர் தமது தமிழ் வாத்தியாரிடம் "இதென்ன?" என்று கேட்டார்.

வாத்தியார் "இது ஒரு பெங்காளிப் பெயர்" என்று சொன்னாராம்.

அரவிந்தர் மயங்கிப்போய் "எப்படி?" என்று கேட்டார்.

வாத்தியார் ***"Birendranath Datta Gupta"*** என்று அச் சொல்லைப் பெங்காளி ரூபத்திலே சொன்னார்.

"இங்கிலீஷ் தெரியாத கிராமத்துத் தமிழர் இச் சொல்லை எப்படி வாசிப்பார்கள்?" என்று அரவிந்தர் கேட்டார்.

"நீர் வாசித்ததுபோலவே *Pirendiranata Tatta Kuptar* (*t* = த) என்றுதான் வாசிப்பார்கள்" என்று வாத்தியார் சொன்னாராம்.

இன்னும் அரவிந்தர் இந்தக் கதையைச் சொல்லிச் சிரிக்கிறார்.

நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், நதிகள், மலைகள் முதலியவற்றின் பெயர்களைப்

பார்க்கும்போது கண் கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரமறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்களென்பதை நினைக்கும்போதே காது கூசுகிறது.

இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்சு, அரபி, பார்ஸி, ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு, ஸாதாரண இங்கிலீஷ் அரிச்சுவடி இடங் கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்ய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக் கிணங்கும்படி சில தனிக் குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டிருக்கின்றன.

நாமும் அப்படியே சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

ஏற்கெனவே நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக்கொள்ளக் கூடிய சில குறிகள் தயார்செய்து வைத்திருக்கிறேன்.

ஆனால், இப் புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்தபிறகுதான் ஏற்படும்.

இப் புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோரும் எழுதிவரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது. புதிய குறிகள் தெரியாதவர்கள்கூட வழக்கம்போலவே படித்துக்கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமமும் ஏற்படாது.

நமது பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும் அந்ய தேசப் பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரமே இப் புதிய முறை ஏற்பட்டது.

எனது புதிய முறையை இப்போதே அறிந்துகொள்ள விரும்புவோர் கீழே கண்ட என் விலாஸத்துக்கு இரண்டணா தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்களுக்கு இம் முறை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்புகிறேன்.

சி. சுப்பிரமணிய பாரதி,
தர்மராஜா தெரு, புதுச்சேரி

குறிப்பு: மற்றப் பத்திரிகைகளும் இதைப் பிரசுரிக்குமாறு வேண்டப்படுகின்றன.

பதிப்பாசிரியர் குறிப்பு

பாரதி எழுதிய இந்தக் கட்டுரையைக் கண்டதும் வ.உ. சிதம்பரம் பிள்ளை (வ.உ.சி.) அவர்கள் பாரதியின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே மறுப்புரைகளாகத் தம்முடைய கருத்துக்களை எழுதி யிருந்தார்.

அந்தக் கட்டுரையும் 'ஞானபாநு' 1915 செப்டம்பர் மாத இதழில் பிரசுரமானது.

அதன் விவரம் வருமாறு:

தமிழ் எழுத்துக்கள்

சென்ற சில வருஷங்களாகச் சில அறிவாளிகள் நம் தமிழ்ப் பாஷையில் சில எழுத்துக்கள் குறைவா யிருக்கின்றன வென்றும், அக் குறைவை நிவிர்த்திக்கத்தக்க பிற பாஷை எழுத்துக்களேனும் பிற சில குறிகளேனும் நம் தமிழ்ப்பாஷை எழுத்துக்களோடு சேர்க்கப்பட வேண்டுமென்றும் கூறிவருகின்றார்கள். ஆனால், அவர்களில் ஒருவரும் அவை சேர்க்கப்படுதல் நம் தமிழ்ப்

பாஷைக்காவது அதன் வளர்ச்சிக்காவது இன்றியமையாததென்று காட்டத்தக்க காரணம் ஒன்றையும் இதுகாறும் கூறிலர்.

இச் சேர்க்கை நம் தமிழ்ப் பாஷைக்கு இன்றியமையாததென்று காட்டக் கருதி நமது நண்பர் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியவர்கள் சென்ற ஆடி மாதத்தில் வெளிவந்த நமது "ஞானபாநு"வில் "தமிழ் எழுத்துக் குறை" என்னும் தலைப் பெயரோடு ஒரு நிரூபம் வரைந்துள்ளார்கள். அந் நிரூபத்தில் மேற்கண்ட சேர்க்கையைச் செய்யவேண்டு மென்பதற்காகக் கூறப்பட்டுள்ள காரணம் ஒன்றே. அஃதாவது, பிற பாஷைகளின் மனிதப் பெயர், நகரப் பெயர் முதலியவற்றிற் சிலவற்றை அப் பாஷையாளர் உச்சரிக்கும் சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத்தக்க சில எழுத்துக்கள் நமது தமிழ்ப் பாஷையில் இல்லை யென்பதே.

நமது நண்பரவர்கள் தமது நிரூபத்தின் ரு-வது பகுதியில் "ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லை யாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி - நியாயமென்று வைத்துக்கொள்வோம்" என்று கூறுகின்றார்கள். அச் சிலர் பிற பாஷைகளின் மனிதப் பெயர், நகரப் பெயர், முதலியவற்றையும் அவ்வப் பாஷைகளின் வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லை யாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று கூறுகின்றனர். இக் கூற்றையும் நமது நண்பரவர்கள் "சரி, நியாயமென்று வைத்துக் கொள்வோம்" என்று அங்கீகரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள், முந்திய ஆக்ஷேபமும் பிந்திய கூற்றும் வேறல்ல வாகலான். அவ்வாறு நமது நண்பரவர்கள் அங்கீகரிப்பார்களாயின் நமது தமிழ்ப் பாஷை எழுத்துக்களோடு பிற சில பாஷை எழுத்துக்களையேனும் பிற சில குறிகளையேனும் சேர்த்தல் இன்றியமையாத தென்பதைக் காட்டத் தக்க காரணம் ஒன்றும் நமது நண்பரவர்கள் நிரூபத்தில் கூறப்படவில்லை யென்பது அதனைப் பார்த்த மாத்திரத்தில் விளங்கும். அவ்வின்றியமையாமையைக் காட்டத்தக்க காரணம் ஒன்றேனும் நமது நண்பரவர்களாலாவது அவர்களைப் போன்ற வேறு பாஷா திருத்தக்காரர்களாலாவது கூறப்படுமாயின், அப்போது நமது தமிழ்ப்பாஷை எழுத்துக்களோடு பிற சில பாஷை

எழுத்துக்களைச் சேர்ப்பதா பிற சில குறிகளைச் சேர்ப்பதா என்னும் விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவும், தீர்மானிக்கவும் நாம் முன்வரக் கடமைப்பட்டுள்ளோம். நிற்க.

"சுதேச மித்திரனைச் சென்ற 15 வருஷங்களாகப் படித்து வருகிற ஓர் அய்யங்கார் நமது நிதானக் கட்சித் தலைவருடைய **Gokhale** என்ற பெயரை கோக்களே என்று உச்சரித்தது நமது நண்பரவர்களுக்குத் தப்பாகத் தோன்றியதும், நமது ஸ்ரீ அரவிந்தரவர்களின் தமிழ் உபாத்தியாயர் ஒரு வங்காளியின் **Birendranath Datta Gupta** என்ற பெயரைத் தமிழர் 'பிரேந்திரநாத தத்த குப்தர்' என்றுதான் வாசிப்பரென்று கூறியது நமது அரவிந்தரவர்களுக்குச் சிரிப்பை உண்டுபண்ணியதும் நமது சமஸ்கிருதப் பண்டிதர்களும் வங்காளிப் பண்டிதர்களும் 'பழனி' 'கிழவி' என்னும் தமிழ்ச் சொற்களை 'பளனி' 'கிளவி' எனவும், 'அறம்' 'மறம்' என்னும் தமிழ்ச் சொற்களை 'அரம்' 'மரம்' எனவும், 'மன்றம்' 'கன்று' என்னும் தமிழ்ச் சொற்களை 'மந்ரம்' 'கந்ரு' எனவும், **'Forices' 'Fourth'** என்னும் ஆங்கிலச் சொற்களை போர்ப்ஸ், போர்த் எனவும் **'Zeal' 'Zenith'** என்னும் ஆங்கிலச் சொற்களை 'ஜீல்', 'ஜெனித்' எனவும் உச்சரிக்குங்கால் நாம் தப்பென்று கூறுவதையும் நமது ஆங்கில நண்பர்கள் சிரிப்பதையும் போன்றனவே யன்றி வேறல்ல.

தெய்வ பாஷை யென்றும் பூரண பாஷை யென்றும் பல பாஷைகளுக்கும் தாய்ப் பாஷை யென்றும் சொல்லப்படுகிற ஸம்ஸ்கிருத பாஷை எழுத்துக்களோடும் பல புதுமைகளையும் திருத்தங்களையும் கொண்டுள்ள பாஷையென்று சொல்லப்படுகிற வங்காளிப் பாஷை எழுத்துக்களோடும் ழ, ற, ன, F, Z என்னும் எழுத்துக்களையாவது, அவற்றின் ஒலிகளைக் குறிக்குங் குறிகளையாவது சேர்ப்பதற்கு நமது நண்பரவர்களும் அரவிந்தரவர்களும் முயற்சித்து வெற்றி பெறுவார்களாயின் அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிக ளாவார்கள்; பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்.

இதுகாறும் தமிழ்ப்பாஷை எழுத்துக்களில் குறையுளது அல்லது தமிழ்ப்பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக்

கற்றுணர்ந்தவராகவாவது சமஸ்கிருத சம்பந்த மில்லாதவராகவாவது சமஸ்கிருத பாஷையில் மேற்சொல்லிய திருத்தங்களையோ வேறு திருத்தங்களையோ செய்ய வேண்டுமென்று கூறியவராகவாவது காணப்படவில்லை யென்றும், அவர்கள் நம் தமிழ்ப்பாஷையைத் திருத்த முற்படுகின்றார்களோ வருத்த முற்படுகின்றார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர். அவ்வையத்தை நிவிர்த்திப்பதற்காகவாவது நம் அவருடைய பாஷையில் திருத்தம் செய்யவேண்டுமென்று தமிழ்ப் முன்வருபவர்கள் தமிழ் இலக்கணங்களுக்கெல்லாம் மூலமென்று கூற சொல்லப்படத் தக்கதா யுள்ள தொல்காப்பியம் ஒன்றையும் தமிழ் இலக்கியங்க ளெல்லாம் சிறந்தவையென்று சொல்லப்படத் தக்கனவாயுள்ள 'சீவக சிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'திருக்குறள்', 'கலிங்கத்துப்பரணி', 'கலித்தொகை', 'திருக்கோவையார்' முதலியவற்றில் ஒருசிலவற்றையுமாவது பூரணமாகக் கற்கவேண்டுவது இன்றியமையாதது. இது நிற்க.

ஒரு பாஷைச் சொற்களை அப் பாஷை எழுத்துக்களாலேயே எழுதப்படுதல் நன்றென்றும் பிற பாஷை எழுத்துக்களால் எழுதப்படுதல் தீதென்றும் சில அறிஞர் கூறுகின்றனர். அவ்வாறு அவர் கூறுவதற்குரிய காரணங்களிலொன்று ஒரு பாஷைச் சொற்கள் மற்றொரு பாஷை எழுத்துக்களால் எழுதப்படுமானால் நாளடைவில் உலகிலுள்ள பல பாஷைச் சொற்களும் பிற பாஷைச் சொற்களோடு கலந்து எவையெவை என்னென்ன பாஷைச் சொற்களென்று தெரியாமற் போகுமென்பது.

மற்றொன்று ஒவ்வொரு பாஷைக்கும் புதிது புதிதாக இலக்கணங்களும் அகராதிகளும் எழுத நேருமென்பது. இன்னொன்று ஒவ்வொரு பாஷை அகராதியும் இலக்கணமும் உலகத்திலுள்ள பல பாஷைகளின் பல சொற்களையும் கொள்ள நேருவதுடன் பல பாஷைகளில் பலவாறு உச்சரிக்கப்படும் சொற்களெல்லாம் பலமுறை எழுதப் பெற நேருமென்பது. இன்னுமொன்று, கடைசியாக உலகத்திலுள்ள சகல பாஷைகளின் சகல சொற்களையும் கொண்டுள்ள அகராதிகளும் இலக்கணங்களும் ஒவ்வொரு பாஷையிலும் எழுதப்படவும், அவற்றை ஒருவரும் கற்க முடியாமற் போகவும் நேருமென்பது.

வேறு சில அறிஞர் பல பாஷைச் சொற்கள் பல சுவைப்பொருள்களுக்கு நிகராமெனவும், சிலர் சில சுவைப் பொருள்களை விரும்பாததுபோல சில பாஷையினர் பிற சில பாஷைச் சொற்களை விரும்பாரெனவும், சில சுவைப் பொருள்களைச் சிலர் முழுப் பொருள்களாகவும் சிலர் பொடிகளாகவும் சிலர் திராவகங்களாகவும் உபயோகிக்க விரும்புவதுபோல சில பாஷைச் சொற்களைச் சில பாஷையினர் முழுச் சொற்களாகவும் சில பாஷையினர் சிதை சொற்களாகவும் சில பாஷையினர் முற்றுமுரு மாற்றப்பட்ட சொற்களாகவும் உபயோகிக்க விரும்புவரெனவும், பல பாஷைச் சொற்களையும் பல பாஷையினரும் எடுத்தாள வேண்டுமென்பது பல சுவைப் பொருள்களையும் பல மனிதரும் உபயோகிக்க வேண்டு மென்பதை ஒக்குமெனவும், பிற பாஷைச் சொற்களை முழுச்சொற்களாகவே ஒரு பாஷையினர் எடுத்தாளவேண்டுமென்பது சில சுவைப் பொருள்களை முழுப் பொருள்களாகவே எல்லோரும் உபயோகிக்க வேண்டு மென்பதை நிகர்க்குமெனவும், ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படி (பிறரை வருத்தாதவாறு) நினைக்கவும் பேசவும் செய்யவும் விடுதலே சுதந்தர இலக்கண மென்பது போல ஒவ்வொரு பாஷையாசிரியரும் விதித்துள்ளபடியே அவ்வப் பாஷையினர் பிற பாஷைச் சொற்களை உபயோகித்துக் கொள்ளுமாறு விடுதலே சுதந்திர இலக்கணமெனவும் கூறுகின்றனர்.

இரு வேறு பாஷையினர் அவ்விருவருமறிந்த ஒரு பாஷை மூலமாகவே ஒருவரோ டொருவர் சம்பாஷிப்பராதலால் ஒரு பாஷையின் சொற்களை அப் பாஷையினர் உச்சரிப்பதுபோல மற்றொரு பாஷையினர் உச்சரித்த வின்றியமையாத தன்றென்பர் வேறு சில அறிஞர்.

உலகத்திலுள்ள சகல பாஷைகளின் சகல சப்தங்களையும் தெரிந்தெடுத்து எந்தெந்தப் பாஷையில் எந்தெந்த சப்தங்களில்லையோ அந்தந்த சப்தங்களைக் குறிப்பதற்குச் சில எழுத்துக்கள் அல்லது குறிகள் ஏற்படுத்தி அவற்றை அந்நிய பாஷையினரோடு எவ்வித சம்பந்தமாவது வைத்துக்கொள்ள விரும்புகின்றவர் மாத்திரம் கற்றல் ஆவசியகமென்பர் சிலர். அவ்வாறு அந்நிய பாஷை சப்தங்களை எடுத்தாள விரும்புவோர்

அவ்வச் சப்தங்களைக் குறிக்கும் அவ்வப் பாஷை எழுத்துக்களையே எடுத்தாளுதல் நன்மையென்றும் அவற்றிற்குப் புதிய குறிகள் ஏற்படுத்துதல் தீமையென்றும் கூறுவர் வேறு சிலர்.

நம் தமிழ்ப்புலவரோ தமது இனிய பாஷையானது யாவராலும் எளிதாகக் கற்கப்படத் தக்கவாறு முப்பது எழுத்துக்களுக்குள் அமைந்திருக்கின்றதென்றும், வேறு பாஷை எழுத்துக்களை இதன் எழுத்துக்களோடு சேர்த்து இதன் எழுத்தெண்ணிக்கையை அதிகமாக்கி இதனைக் கற்பதற்குக் கஷ்டமடையுமாறு செய்தல் கூடாதென்றும், அந்நிய பாஷையினரோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பும் அரசர், வணிகர் முதலியோர் மாத்திரம் மேற்குறித்தவாறு தமிழ்ப் பாஷையில் இல்லாத பிற பாஷைச் சப்தங்களைக் குறிக்கும் அவ்வப் பாஷை எழுத்துக்களைக் கற்றாளவேண்டு மென்றும் கூறுகின்றனர்.

இப் புலவரிற் சிலர் ரு, றே, ணு, ணே என்னும் எழுத்துக்களும் முறையே றா, றோ, ணா, ணோ என்று எழுதப்பட்டுத் தமிழ்ப் பாஷையைக் கற்றாளுதலை இன்னும் எளிதாக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

இதுகாறும் கூறப்பட்டுள்ளவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் நமது நண்பவரவர்கள் சிந்தித்துத் தமிழ்ப் பாஷை எழுத்துக்களிற் பிற பாஷை எழுத்துக்களையோ அவற்றின் சப்தத்தைக் கொடுக்கும் குறிகளையோ சேர்ப்பதும், தமிழ் நாட்டுக் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து ஊரை விட்டு வெளியேறா திருக்கும் தமிழ் மக்களும் பிற பாஷையினரின் சம்பந்தம் வேண்டாத தமிழ் மக்களும் அவற்றைக் கற்க வேண்டுவதும் ஆவசியகம்தானா என்பதைத் தீர்மானித்து, அதனைத் தக்க காரணங்களோடு நமது "ஞான பாநு" மூலமாக வெளியிடுவார்களாக.

[ஞானபாநு: செப்டம்பர் 1915 - பக். 153-157]

தம்முடைய உயிர் நண்பரான வ.உ.சி. அவர்கள் எழுதிய கருத்துரைகளைப் படித்த அளவில், மீளவும் தாம் கொண்டிருந்த தமிழ் சீர்திருத்த எழுத்து முறைகளை விளக்கிப் பாரதி "ஞானபாநு" இதழுக்கு அனுப்பினார்; அவர் எழுதிய கட்டுரையும் 1915 அக்டோபர் (பக். 184-185) இதழில் பிரசுரமானது.

பாரதி எழுதிய விளக்கக் கட்டுரையின் விவரம் வருமாறு:

ஜ. ஷ. ஸ. ஹ. க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத முடியாமலும் போய்விடுமென்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று.

தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாதவண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்.

நாமும் அப்படியே நமக்கு இக் காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்துகொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால், அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித ஸங்கடமும் நேரிடாது. தப்பாகவோ, சரியாகவோ வழக்கம்போல வாசித்துக்கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்கமாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும்போதே நிறுத்திவிட நேரிடும்.

ப்ரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், ஹிந்தி முதலிய நமது நாட்டு பாஷைகளிலும், - உயிருள்ள பாஷைகளிலே வளர்வன வெல்லாவற்றிலும் - உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து ஸௌகர்யப்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது.

இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ்மொழி விசாலமடையவேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்.

சி. சுப்பிரமணிய பாரதி

கால வரிசைப் படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்

எட்டாம் தொகுதி

[ஜனவரி 1914 - 26-12-1916]

பதிப்பு

சீனி. விசுவநாதன்

வெளியீடு

சீனி. விசுவநாதன்

2, மாடல் ஹவுஸ் லேன்,

சி. ஐ. டி. நகர்,

சென்னை - 600 035.

நூல் விவரம்

முதற் பதிப்பு	:	11 டிசம்பர் 2007
மூல நூலாசிரியர்	:	மகாகவி பாரதியார்
பதிப்பாசிரியர்	:	சீனி. விசுவநாதன்
பதிப்புரிமை	:	பதிப்பாசிரியருக்கே
நூலின் வடிவம்	:	1/8 டெம்மி
பக்கங்கள்	:	736
அச்சுப் புள்ளி	:	12 மற்றும் 11 புள்ளிகள்
அச்சுத் தாள்	:	18.6 கிலோ மேப் லிதோ
கட்டமைப்பு	:	கெட்டி அட்டைக்கட்டு
அச்சுக் கோப்பு	:	இம்ப்ரஸ் அசோசியேட்ஸ், சென்னை - 600 094.
அச்சிட்டது	:	நாதன் & கம்பெனி சென்னை - 600 042.